**மதுரை, வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணைகள்.**
**பிறப்பிப்பவர் – திரு.த.விவேகானந்தன், எம்.எஸ்ஸி(விவ).,**

**எண்.பநி.3/ 9777/ 2021** **நாள் – 09.08.2021.**

பொருள் – பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.வி.வடிவேலன், இளநிலை உதவியாளர் (பி.அ)ஆக பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை –
1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி.6/91289/2011, நாள் : 08.02.2019.
2. தேனி, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ஆ3/1663/2019, நாள் – 26.02.2019.
3. அரசாணை (நிலை) எண். 48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை (க்யு.1) நாள் : 26.02.2021.
4. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண்.அநிபி3/18841/2020, நாள் – 21.04.2021.

*******

ஆணை :

விநாயகபுரம், நீர் மேலாண்மை பயிற்சி நிலையம், வேளாண்மை துணை இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திரு.வி.வடிவேலன் அவர்களுக்கு பார்வை (1) மற்றும் பார்வை (2)-ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி கருணை அடிப்படையில் தேனி, வேளாண்மை இணை இயக்குநர் அவர்கள் கட்டுப்பாட்டில் உள்ள தேனி, வேளாண்மை துணை இயக்குநர் (உபநி) அலுவலகத்தில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பி.அ)ஆக பணிநியமனம் வழங்கப்பட்டு 06.03.2019 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

அதனைத்தொடர்ந்து பார்வை (3)ல் காணும் அரசாணை மற்றும் பார்வை (4)ல் காணும் சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு தனியர் இளநிலை உதவியாளர் (பி.அ) பதவியில் அரசுப்பணியில் சேர்ந்த நாளான 06.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.



E:\c data 10-1-18\Documents\A3\2021\9777-2021( 09.08.2021) Regularisation proc_unicode.docx

இவர் இளநிலை உதவியாளர் (பி.அ) பதவியில் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு தொடர் பணிகாலத்திற்குள் முடிக்க வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

தனியர் மேற்காணும் தகுதிகாண் பருவக்காலத்திற்குள் இளநிலை உதவியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை முடிக்க வேண்டுமெனவும், காலதாமதமாக பயிற்சி நிறைவு செய்தால் அரசிடமிருந்து விதி தளர்வு பெற்ற பின்னரே தகுதிகாண்பருவம் முடித்ததற்கான ஆணை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், தனியருக்கு தகுதிகாண் பருவம் முடித்ததாக ஆணையிடப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர்ந்த ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவர் எனவும் ஆணையிடப்படுகிறது.

(ஒம்) த.விவேகானந்தன்,
வேளாண்மை இணை இயக்குநர்
மதுரை – 2.

பெறுநர்

திரு.வி.வடிவேலன், இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது).
- வேளாண்மை துணை இயக்குநர், நீர் மேலாண்மை பயிற்சி நிலையம், விநாயகபுரம் – மூலமாக.

நகல் : வேளாண்மை துணை இயக்குநர், நீர் மேலாண்மை பயிற்சி நிலையம், விநாயகபுரம்.

(தனியருக்கு பணிவரன்முறை செய்து ஆணையிட்டதைத் தொடர்ந்து முதலாவது (01.01.2020க்கு) வருடாந்திர ஊதிய உயர்வு வழங்கி அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவித்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.)

நகல் – வேளாண்மை இணை இயக்குநர், தேனி.

நகல் : சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது. (அநிபி.3 பிரிவு)

நகல் : இருப்புக் கோப்பு.

/ உத்தரவின்படி /

ஆட்சி அலுவலர்

வேளாண்மை துணை இயக்குநர்
நீர்மேலாண்மை பயிற்சி நிலையம்
விநாயகபுரம்